# Colombo Theological Seminary

189, Dutugemunu Street, Kohuwala
Tel. 552 4257
Email: registrar@cts.lk Website: www.cts.lk

## CCS- சிறுவர் ஊழிய தடம்
## அனுமதி பெற விண்ணப்பப்படிவம்

1. பெயர்- NAME: ………………………………………………………………………………….

   ……………………………………………………………………………………………………………

2. பிறந்த திகதி DATE OF BIRTH: …………………..…………………………………………

3. திருமண நிலை (பொருத்தமானதற்கு வட்டமிடவும்): தனிநபர் / திருமணமானவர் / விதவை / பிரிந்தவர் / விவாகரத்து பெற்றவர்

4. சபை: ……………………………………………………………………………..………………

5. சபை விலாசம்: ……………………………………………………………………………………………

   ……………………………………………………………………………………………………………

6. நிரந்தர விலாசம்: ……………………………………………………………………………….....

   ……………………………………………………………………………………………………………

7. அஞ்சல் விலாசம் (மேற்குறிப்பிட்டதை விட வித்தியாசமாக இருப்பின்) ……………………………………………………………………………………………………
   ……………………………………………………………………………………………………………

8. மின்னஞ்சல்:………………………………… கைபேசி: ……………………..

   வட்ஸ்ஹப்:…………………………

9. ஆகக்கூடிய கல்வித் தகமை*: ………………………………………………………

10. கிறிஸ்தவ ஊழிய அனுபவம்

| சபை / கிறிஸ்தவ நிறுவம் | பொறுப்பு / திட்டப்பணி | காலம் / திகதிகள் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

தேசிய அடையாள அட்டை இல

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

மூன்று**(03)** கடவுச்சீட்டு அளவு நிழற்படம்

11. உங்களிடம் சிறுவர் தொடர்பாக, வழக்கு நிலுவையில் உள்ளதா அல்லது நீங்கள் எப்போதாவது குற்றவாளி என நிரூபிக்கப்பட்டுள்ளீர்களா? காவல்துறையினரால் அல்லது உங்கள் தலைவரிடமிருந்து சிறுவர் தொடர்பான குற்றத்திற்கும் கண்டிப்பு அல்லது எச்சரிப்பு பெற்றிருக்கிறீர்களா? ஆம் / இல்லை

ஆம் எனில், தயவு செய்து அந்த வழக்குகள் அல்லது குற்றமும் அதன் தண்டனையும் உள்ளிட்ட விவரங்களை வழங்கவும், உங்களுக்கு எதிரான முந்தைய விசாரணைகள் அல்லது குற்றச்சாட்டுகளை அறியத் தரவும்.

12. நீங்கள் தற்போது மதுவுக்கு அல்லது ஆபாசப்படங்கள் அகியவற்றிற்கு அடிமையாக உள்ளீர்களா? அல்லது அதிலிருந்து விடுபட முயல்கிறீகளா? ஆம் / இல்லை

13. பின்வரும் கேள்விகளுக்கு சுருக்கமான பதில் தரவும்.

- உங்கள் தற்போதைய ஊழியத்தை விவரிக்கவும்

- உங்கள் ஊழியத்தில், நீங்கள் அதிகம் ரசிப்பது குறித்து சுருக்கமாக விவரிக்கவும்.

- உங்கள் ஊழியத்தில் நீங்கள் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால்கள் யாவை?

- இந்த பாடத்திட்டத்தைப் பின்பற்றுவதன் மூலம் நீங்கள் எவ்விதத்தில் நன்மை பெறுவீர்கள் என்று நம்புகிறீர்கள்?

- உங்களது ஆவிக்குரிய வளர்ச்சியைக் கண்காணிக்க எவ்விதமான பொறுப்புக்கூறல் கட்டமைப்புகள் உள்ளன?

14. சிபாரிசுகள்

- ○ உங்கள் போதகர் - தயவு செய்து இணைக்கப்பட்ட சிபாரிசு படிவத்தை உங்கள் போதகர் பூர்த்தி செய்து, அதனை நேரடியாக நமக்கு அனுப்பி வைக்குமாறு கோரவும்.
- ○ உங்கள் திருச்சபையில் குறைந்தபட்சம் ஒரு வருடமாக உங்களை அறிந்த கிறிஸ்தவ ஊழியத்தில் உள்ள தலைவர் ஒருவரால், நீங்கள் சிறுவர் ஊழியத்தில் பணியாளராகப் பயிற்றுவிக்கப்படுவதற்கு தகுதியுடையவர் என்பதைக் குறித்து அவரின் எழுத்துப்பூர்வ பரிந்துரையை இணைக்கவும்.

15. விசுவாச அறிக்கை

கீழே கையொப்பமிடுவதன் மூலம் விசுவாச அறிக்கை உங்களுக்கு ஏற்புடையது என தெரிவிக்கிறீர்கள்.

நான் மேல் கொடுத்த தகவல் முழுமையானதும் உண்மையானதும் என அறிவிக்கிறேன்.

கையொப்பம்: ______________________________ திகதி: ____________________

*இப்பாட வழியில் கற்க குறைந்தபட்சம் க.பொ.த சா/த அவசியம். உங்கள் பரீட்சை பெறுபேற்றுத் தாளின் நகலை இணைக்கவும்.

அஞ்சல் முகவரி

The Coordinator
Children Ministry Track
Colombo Theological Seminary,
No.189, Dutugemunu Street,
Kohuwela

Colombo Theological Seminary

# Statement of Faith

## CTS விசுவாசப்பிரமாணம

1. வேதாகமத்தின் பழைய, புதிய ஏற்பாட்டுகளில் அடங்கியுள்ள 66 நூல்களும் தெய்வீகமானதும் பூரணமாக அருளுட்டப்பட்டதும், ஆரம்பத்தில் தவறற்ற நிலையில் அருளப்பட்டது எனவும் விசுவாசிக்கிறோம். அவை எமது நம்பிக்கையையும், நடத்தையையும் ஆண்டு நடத்தும் அதிஉயர்வான, அதிவிசேட அதிகாரமுள்ளதும் நம்பிக்கைக்குரியதும் என விசுவாசித்து கீழ்ப்படிகிறோம். சபையானது வேதாகமத்தை புரிந்து கொள்ளவும் நடைமுறைப்படுத்தவும் கடவுள் பாரம்பரியத்தை, நியாயத்தை, அனுபவத்தை பாவிக்கிறார் என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம்

2. ஒரே தேவனாக, தூய, நித்திய, சர்வாதிபத்திய, சர்வ அதிகாரமுள்ள, காணப்படும் காணப்படாத அனைத்தையும் படைத்த, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாக நித்தியமான அன்பின் உறவில் இணைக்கப்பட்டு, ஏகத்துவத்தில் நிலைத்திருக்கும் ஒரே தேவனை விசுவாசிக்கிறோம்

3. பிதாவாகிய கடவுள் அவரது பராமரிப்பு, நீதியுள்ள அதிகாரம் என்பவற்றை அற்புதமான தனது படைப்பினூடு எமக்கு வெளிக்காட்டி தாம் எமது தந்தை என்பதை எமக்கு தெரியப்படுத்தியிருக்கிறார் என்பதை விசுவாசிக்கிறோம். ஆரம்பத்தில் ஆபிரகாமை தெரிந்துகொண்டதனிமித்தம் தமது அன்பினூடு இஸ்ரவேல் மக்களை தெரிந்துகொண்டு உடன்படிக்கை செய்தார். இப்பொழுது அவரது குமாரனாகிய இயேசு கிறிஸ்து மூலம் அனைத்து மக்களையும் அவருடைய அன்பின் உறவுக்குள் கிருபையினூடு அழைக்கிறார். அதன் மூலம் நாம் அவரது நித்தியமான பிள்ளைகளாக இருக்கிறோம் என்பதை விசுவாசிக்கிறோம்.

4. ஒரே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம்: அவர் கன்னி மரியாளிடத்தில் பரிசுத்த ஆவியினாலே உற்பவித்து பிறந்தார், கடவுள் மனிதனானார். தேவனுக்கு கீழ்ப்படிந்ததினாலே பாவமற காணப்பட்டு, தேவனுடைய இராஜ்யத்தை பிரசித்தம் பண்ணினார். அவரது பணியினூடும், அற்புதங்களினூடும் அவரது வல்லமையை வெளிக்காட்டி அவரது சீசர்கள் வாழ வேண்டிய மாதிரியை காண்பித்தார். அவரது பிரயாசித்த பரிகாரப்பலியினூடு வேதனையையும், நிந்தையையும் அனுபவித்து மனிதனுக்கான பாவத்தின் கிரயத்தை செலுத்தி பாவத்தையும், சாத்தானின் வல்லமையையும் வெற்றிகொண்டார். அவர் சரீரத்தில் உயிர்த்தெழுந்ததன் மூலம் முழு உலகையும், இதிகாசத்தையும் ஆட்சி செய்து சபைக்காக பிதாவினிடத்தில் வேண்டுதல் செய்கிறார். எதிர்பார்க்கப்படும் அவரது வருகையில் நியாயத்தீர்ப்பினூடு தேவனது நீதியை நிலைநாட்டி அவரது இராஜ்யத்தை நிலைநிறுத்துவார்.

5. பரிசுத்த ஆவியை விசுவாசிக்கிறோம்: வாழ்வின் மூலாதாரமும், படைப்பில் ஈடுப்பட்டிருப்பவரும், தேவனுடைய பிரசன்னத்தை உணர்த்துபவரும், சத்தியத்தை வெளிப்படுத்துபவரும், அவரது குமாரனுக்கு சாட்சியளிப்பவருமான பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கிறோம். அவர் மனிதனின் பாவத்தை உணர்த்தி நற்செய்திக்கு செவிமடுக்க உதவுகிறார். அவரை விசுவாசிப்பவர்களிடத்தில் வாசமாயிருந்து அவர்களுக்கு உயிரூட்டி, வல்லமையளித்து, தூய்மைப்படுத்தி, வழிகாட்டி, ஒரே சபையாக ஒன்றுபடுத்துகிறார். ஆவியின் கொடைகளை அருளி விசுவாசிகள் பரந்தளவில் பணிசெய்ய ஊக்குவிக்கிறார்.

6. மனிதன் தேவனின் சாயலில் படைக்கப்பட்டவன் என்பதை விசுவாசிக்கிறோம். அதனிமித்தம் அவருடன் உறவுள்ளவனாக படைப்பில் அவரது ஆளுகையின் பிரதிநிதியாக காணப்படுகிறான்.

தேவனுக்கு கீழ்ப்படியாததன் நிமித்தம் அவரது சாயல் சிதைந்து அவனது மானிட வாழ்வின் அனைத்து பாகங்களும் பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் தேவனையும், சமூகத்தையும், படைப்பையும் விட்டு பிரிந்திருக்கிறான். ஆயினும் தேவன் அவனுக்களித்த சுயமதிப்பு, பெறுமதி அவனிடத்தில் காணப்படுகிறது என்பதை விசுவாசிக்கிறோம்.

7. அழிந்து கொண்டிருக்கும் பாவத்தில் வீழ்ந்துள்ள மனிதகுலம் இயேசு கிறிஸ்துவின் பாவபரிகார பலியினூடு மட்டுமே மீட்கப்பட முடியும் என்பதை விசுவாசிக்கிறோம். மீட்பானது பாவம் மன்னிக்கப்பட்டு, குற்ற உணர்வு, வெட்க மனப்பான்மை நீங்கி தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்பட்ட நித்திய வாழ்வை பரிசுத்த ஆவியின் புனர்ஜென்மம் மூலம் மீளப்பெறுவதாகும். தேவனுடனான இந்த ஒப்புரவு விசுவாசிகள் அனைவருடனுமான ஒப்புரவை வலியுறுத்துகிறது. மீட்பில் மனிதன் சாத்தானின் வல்லமையிலிருந்தும் மரணத்தின் பயத்திலிருந்தும் விடுவிக்கப்படுகிறான். மீட்பானது இயேசு கிறிஸ்து மீது மட்டுமே வைக்கும் விசுவாசம், மனந்திரும்புதலூடாக கிருபையினூடு கிடைத்து மனப்பூர்வமான நற்கிரியைகள் மூலம் வெளிக்காட்டப்படுகிறது. கிறிஸ்துவின் இக்கிரியையானது வீழ்ந்துபோன படைப்பை மறுவுருவாக்கும் செயற்பாட்டை உள்ளடக்கியுள்ளது.

8. அனைத்து விசுவாசிகளும் தூய்மையான வாழ்வுக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என விசுவாசிக்கிறோம். இவ்வாழ்வானது கிறிஸ்துவைப்போல் மறுரூபமாதலுக்குள் எம்மை மென்மேலும் வழிநடத்துகிறது. தூய்மையானது பரிசுத்த ஆவியின் கிருபையின் செயற்பாட்டினூடும் வார்த்தையினூடும் வருகிறது. நாம் கிறிஸ்துவின் சபையாக கீழ்ப்படிந்து நடப்பதன் மூலம் இது உண்டாகும்.

9. அப்போஸ்தலர் உபதேசத்திலும், பரிசுத்த ஆவியின் வடிவமைப்பிலும், கிறிஸ்து ஸ்தாபகம் செய்த சபையை விசுவாசிக்கிறோம். சபையானது சர்வலோக மக்கள், இனங்கள், கலாச்சாரங்கள், மொழிகளை உள்ளடக்கி ஒப்புரவில் வளர்ந்து பெருகிவரும் ஐக்கியப்பட்ட கிறிஸ்துவின் சரீரமாக இருக்கிறது.

10. அருட்பணியானது கடவுளின் தொடர்ச்சியான மீட்பின் கிரியையாகவும் படைப்பை மறுவுருவாக்கும் செயற்பாடடினூடு கிறிஸ்துவின் இராஜரீகத்தை நிலைநாட்டும் கிரியையாகவும் காணப்படுகிறது என்பதை விசுவாசிக்கிறோம். இப்பணிக்காக அவர் சபையை பரிசுத்த ஆவியினூடு பலப்படுத்தி இராஜ்யத்தின் நற்செய்தியை அறிவிக்க உலகிற்குள் அனுப்புகிறார். அதனிமித்தம் இரக்கமும் நீதியும் உண்டாகி சபையானது உலகில் கிறிஸ்துவின் சுகந்த வாசனையாக காணப்படும்.

11. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் என்பதை விசுவாசிக்கிறோம். அவரது நீதியான நியாத்தீர்ப்பின் மூலம் தீமை ஒழிக்கப்படும், மனந்திரும்பாதவர்கள் நித்திய ஆக்கினைத்தீர்ப்படைவார்கள், மனந்திரும்பியவர்கள் நித்திய வாழ்வடைவார்கள். அவரது இந்த புதிய படைப்பில் மீட்கப்பட்ட மக்கள் தேவனுடன் நித்திய மகிமையில் நித்தமும் வாழ்வார்கள்.

மாணவர் பெயர்: ……………………………………………………

கையொப்பம்: ……………………………….. திகதி: ………………………….

## A Personal Inventory
## சுயநபருக்குரிய இருப்பு ஆய்வு
### உங்கள் தற்போதைய சூழ்நிலையை பிரதிநிதித்துவப்படுத்தும் இலக்கத்தினை வட்டமிடுங்கள்

1. நான் தொடர்ந்து கடவுளுடைய வார்த்தையைக் கற்பதில் நேரத்தைச் செலவிடுகிறேன்.

**குறைவு 1 2 3 4 5 6 7 8 9 10 அதிகம்**

2. நான் என் வாழ்க்கையில் தேவ சித்தத்தை நாடி, ஜெபத்தில் தவறாமல் நேரத்தை செலவிடுகிறேன்.

**குறைவு 1 2 3 4 5 6 7 8 9 10 அதிகம்**

3. என்னை மிகவும் முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவராக மாற்ற கடவுள் என் வாழ்க்கையின் சோதனைகளைப் பயன்படுத்துவதை நான் கண்டிருக்கிறேன்.

**குறைவு 1 2 3 4 5 6 7 8 9 10 அதிகம்**

4. கடவுள் என் மீது வைத்திருக்கும் அன்பை உறுதிப்படுத்தும் குறிப்பிட்ட வேத வசனங்களை என்னால் அடையாளம் காண முடியும்

**குறைவு 1 2 3 4 5 6 7 8 9 10 அதிகம்**

5. எனது குடும்பத்திற்கு உள்ளேயும் வெளியேயும் உள்ளவர்களுக்கு என் அன்பையும் அக்கறையையும் காண்பிப்பதில் நான் முயற்சிக்கிறேன்.

**குறைவு 1 2 3 4 5 6 7 8 9 10 அதிகம்**

6. எனக்குத் தெரிந்த கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களுடன் சுவிசேஷத்தைப் பற்றி கலந்துரையாடுவதில் நான் தைரியமுள்ளவராக இருக்கிறேன்.

**குறைவு 1 2 3 4 5 6 7 8 9 10 அதிகம்**

7. நான் உணர்வு மற்றும் அக்கறையுடையவர் என்று மக்கள் என்னிடம் கூறுகிறார்கள்.

**குறைவு 1 2 3 4 5 6 7 8 9 10 அதிகம்**

8. மக்கள் தங்கள் தேவையுள்ள நேரத்தில் நான் அவர்களுக்கு உதவி செய்துள்ளேன் என்று கூறுகிறார்கள்.

**குறைவு 1 2 3 4 5 6 7 8 9 10 அதிகம்**

9. நியாயம் தீர்க்காமல், சிறுவர்களுடன் தொடர்புகொள்வது எனக்கு வசதியாக இருக்கிறது.

**குறைவு 1 2 3 4 5 6 7 8 9 10 அதிகம்**

10. சிறுவர்களின் உரையாடலில் அவர்கள் விபரிக்கும் சந்தர்ப்பங்களில் குறுக்கிடாமல் அவர்களுக்கு செவிகொடுக்க முடியும்.

**குறைவு 1 2 3 4 5 6 7 8 9 10 அதிகம்**

11. வாழ்க்கையின் சிக்கல்களுடன் போராடும் மக்களுக்கு, வேதாகமம் பயனுள்ள ஞான அறிவுரைகளைக் கொண்டுள்ளது என்று நான் நம்புகிறேன்.

**குறைவு 1 2 3 4 5 6 7 8 9 10 அதிகம்**

12. நான் செய்துகொண்டிருப்பதை நிறுத்தி, சிறுவர்கள் தங்கள் பிரச்சினைகளை விவரித்துச் கூறுவதைச் செவிகொடுப்பது எனக்கு எளிது.

**குறைவு 1 2 3 4 5 6 7 8 9 10 அதிகம்**

13. ஒரு குறிப்பிட்ட வழியில் செயல்படும்படி சிறுவர்களுக்கு சொல்வதற்கு முன்பு, அவர்கள் உணரும் வேதனையை குறித்து அக்கறையுள்ளவர்.

**குறைவு 1 2 3 4 5 6 7 8 9 10 அதிகம்**

14. மௌனத்துடன் அல்லது கண்ணீருடன் நீண்ட நேரம் இருக்கும் சிறுவர்களுக்கு ஊழியம் செய்வதற்கு இலகுவாக இருக்கும் முறைகளைப் பயன்படுத்தி ஊழியம் செய்ய முடியும்.

**குறைவு 1 2 3 4 5 6 7 8 9 10 அதிகம்**

15. நான் கோபப்படாமல், சிறுவர்கள் தமது கோபத்தை வெளிப்படுத்தும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு செவிசாய்க்க முடியும்.

**குறைவு 1 2 3 4 5 6 7 8 9 10 அதிகம்**

16. நான் சௌகரியமாக சிறுவர்களுக்கு ஊழியம் செய்கிறேன், அவர்களுடன் எளிதாக தொடர்பு கொள்ள முடியும்.

**குறைவு 1 2 3 4 5 6 7 8 9 10 அதிகம்**

17. குழப்பமான சூழ்நிலைகளில், இரக்கமுள்ளவராகவும் அதேவேளை உறுதியாக வழிநடத்தக்கூடிய ஒருவராகவும் சிறுவர்கள் என்னைப் பார்க்கிறார்கள்.

**குறைவு 1 2 3 4 5 6 7 8 9 10 அதிகம்**

18. பாலியல் தொடர்பான பிரச்சினைகளைப் பற்றி சிறுவர்களுடன் பேசுவதற்கு எனக்கு சௌகரியம் உண்டு.

**குறைவு 1 2 3 4 5 6 7 8 9 10 அதிகம்**

19. என்னுடன் பகிரப்பட்டவைகள் குறித்து என்னால் இரகசியம் பேண முடியும்.

**குறைவு 1 2 3 4 5 6 7 8 9 10 அதிகம்**

20. கிறிஸ்தவ வாழ்க்கையில், எனது சொந்த வளர்ச்சியை நான் நேர்மையாக மதிப்பீடு செய்கிறேன்.

**குறைவு 1 2 3 4 5 6 7 8 9 10 அதிகம்**

கையொப்பம்:____________________________________ திகதி: ________________________